Registered as a Newspaper

ம. இருதயதாஸ்
பெற்றுத்தரும்
வெளிநாட்டு உடனடி
வேலைவாய்ப்புகள்!
சவூதி, பேறூட், குவைத்
பணிப்பெண்கள்
15 நாட்களில் பிரயாணம்
ம. இருதயதாஸ்
96, 4-ஆம் குறுக்கு வீதி,
சின்னக்கடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/.

ம. இருதயதாஸின்
உடனடி வெளிநாட்டு
வேலைவாய்ப்புக் கையிருப்பு
பேறூட், சவூதி
ஆண்கள்: லேபரஸ்
ம. இருதயதாஸ்
மரியா என்ரப்பிறைஸஸ்
கருவில் வீதி,
(Y M C A முன்பாக)
ஊர்காவற்றுறை.

கடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஞு கார்த்திகை மீ 22 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ற. ஆகிர் பிறை 26 (07 12 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 10

## மதவாச்சிக்கு அருகே ரயில் பாதை சேதம்!

வவுனியா. டிச 7

அனுராதபுரத்துக்கும் மதவாச்சிக்கும் இடையில் பரசங்காவ பகுதியில் ரயில் தண்டவாளங்கள் அகற்றப்பட்டு சிலிப்பர் கட்டைகள் எரிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

உணவுப் பொருள் விநியோகத்தைத் தடை செய்யும் நோக்கத்துடன் நாசகார சக்திகளே இந் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கலாம் என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதன் காரணமாக வடபகுதிக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு எரி பொருள்கள், உணவுப் பொருள்கள் ஏற்றிச் சென்ற ரயில் அங்கிருந்து திரும்பும் வழியில் வவுனியாவிலும் கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு உணவுப்பொருள்களை ஏற்றிவந்த ரயில் அனுராதபுரத்திலும் தரித்துநிற்க நேரிட்டுள்ளதாக ரயில்வே வட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாகோவிலும் சேதம்

கொழும்பு டிச 7

மாகோ அருகில் ரயில் சிலிப்பர் கட்டைகளுக்கு இனந்தெரியாதோர் தீ வைத்து சேதப்படுத்தினர் என்று அறிக்கை ஒன்று தெரிவித்தது.

இதனால் கிழக்கிற்கான ரயில் போக்குவரத்துப் பாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## ராஜகிரிய மோதலில் 3 தீவிரவாதிகள் பலி!

ராஜகிரியா, ஓபயசேகரபுரத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் நடந்த மோதலில் 3 தீவிரவாத சந்தேக நபர்கள் பாதுகாப்புப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இம் மோதலில் இரண்டு இராணுவ அதிகாரிகள் படுகாயமடைந்தனர். (உ-எ)

### ஒரே வீட்டிலிருந்து

## 53 சந்தேக நபர்கள் வாகனங்களுடன் கைது

கொழும்பு, டிச. 7

தென்பகுதியில் ஆண்டியம்பல என்னும் இடத்தில் வீடு ஒன்றை முற்றுகையிட்ட பாதுகாப்புப் படையினர் 15 மோட்டார் சைக்கிள்கள், 25 சைக்கிள்கள், இரண்டு கார்கள், இரண்டு வேன்கள், ஒரு லொறி ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

அங்கிருந்து 53 சந்தேக நபர்களும் அப்போது கைது செய்யப்பட்டனர். (உ-எ)

## மற்றொரு மின்கோபுரம் ஹபரணையில் தகர்ப்பு!

### திருமலையும் இருளில் மூழ்கியது

யாழ்ப்பாணம் டிச 7

ஹபரணையில் உள்ள மற்றுமொரு மின்கோபுரம் தீவிரவாதிகளினால் தகர்க்கப்பட்டிருக்கிறது. இதனால் திருகோணமலை மாவட்டத்திற்கான மின்விநியோகம் முழு அளவில் துண்டிக்கப்பட்டது

மின்சார சபை வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளன.

இந்த நாசவேலையையடுத்து ஏற்கனவே இருளில் மூழ்கியிருந்த வட மாகாணம் வடமத்திய மாகாணம் என்பவற்றுடன் சேர்ந்து கிழக்கு மாகாணமும் இருளில் மூழ்கியிருக்கிறது. [உ-5]

## தென்னிலங்கையில் வீதி ஓரங்களில் சடலங்கள்

கொழும்பு, டிச 7

ஹம்பாந்தோட்டையில் வீதி ஓரங்களில் நேற்று முன்தினம் பதின்மூன்று சடலங்கள் அநாதரவாகக்கிடக்கக்காணப்பட்டன.

மாத்தறைப் பகுதியிலும் மூன்று சடலங்கள் இதே நிலையில்கிடந்தன.

## யாழ்ப்பாணத்தில் பிரேமா 12 ஆம் திகதி பேசுவார்

கொழும்பு, டிச. 7

எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பிரதமர் பிரேமதாசா கலந்துகொண்டு பேசுவார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதே சமயம் இலங்கை மக்கள் கட்சியின் கூட்டங்கள் டிசம்பர் 12 ஆம் திகதி அம்பாறை சம்மாந்துறை ஆகிய இடங்களிலும் —

டிசம்பர் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் மற்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணம்:

# மேலும் 7½ கோடி ரூபா நிவாரணம் ஒதுக்கீடு

### மரண தண்டனை:

## மனுக்கள் விசாரணையில்!

புதுடில்லி, டிச. 7

இந்திராகாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட சத்வன் சிங், கேஹர்சிங் ஆகியோரின் மனுக்கள் நேற்று புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. விசாரணை இன்று தொடரும் இவர்களின் கருணை மனுக்களை ஜனாதிபதி நிராகரித்ததை ஆட்சேபித்தே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ-எ)

## சட்டம் நிறைவேறியது

கொழும்பு, டிச. 7

சார்க் அமைப்பு நாடுகள் தங்களுக்கிடையே பயங்கரவாதிகளை பரிமாறிக்கொள்ள வசதி அளிக்கும் சட்ட மூலம் ஒன்று நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. (உ-எ)

## 17 ஆயிரம் பேர் விடுதலையாவர்

புதுடில்லி, டிச 7

பாகிஸ்தானில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் உட்பட 17 ஆயிரம் பேர் இன்னும் இரண்டொரு தினங்களில் விடுதலை செய்யப்படுவர்.

இவர்களுள் ஆயிரத்து 181 பேர் இராணுவ நீதிமன்றங்களினால் ஏற்கனவே குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்கள் ஆவர்.

## இஷாக்கான் பொதுவேட்பாளர்

இஸ்லாமாபாத் டிச. 7

பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி பிரதான எதிர்க்கட்சியான இஸ்லாமிய ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் பொது ஆதரவு வேட்பாளராக பதில் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் அறிவிக்கப்பட்டிருக்கிறார். (உ)

### சுபநேரம்

7 - 12 - 1988
கார்த்திகை 22
புதன்கிழமை
சுபநேரம்:-
04-47 முதல் 06-17வரை
ராகுகாலம்:-
12 17 முதல் 01-47வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## ஆனால் உரியவர்களுக்கு வழங்க முடியாமல் அரச அதிபர் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 7

யாழ் மாவட்டத்தில் அண்மைக் கால இராணுவ நடவடிக்கைகளின்போது பாதிப்புற்று இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் நிவாரணமாக வழங்குவதற்கு மேலும் ரூபா ஏழரைக் கோடி நிதி நேற்று மாலை ஒதுக்கீடு செய்யப்பட்டது. முன்னர் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏழரைக் கோடி ரூபாவுடன் சேர்ந்து தற்போது மொத்தமாக பதினைந்து கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த நிதியை உரிய குடும்பங்களுக்கு வழங்கமுடியாது அரச அதிபர் திண்டாடுகிறார். உரிய குடும்பங்களுக்கு வழங்கப்படாமல் இந்த நிதி அரசாங்கத்திற்கு திரும்பிச் சென்றுவிடலாம் என அவர் அச்சம் தெரிவித்தார்.

இரண்டாவது தொகுதி நிதியை (ரூபா ஏழரைக் கோடி) ஒதுக்கீடு செய்வதற்கான தஸ்தாவேஜுக்கள் நேற்று மாலை கொழும்பில் புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சில் கையெழுத்திடப்பட்டன.

முன்னர் ஒதுக்கப்பட்ட ஏழரைக்கோடி ரூபாவில் ஒன்றரைக்கோடி ரூபாவே இதுவரை விநியோகிக்கப்பட்டிருக்கிறது. 15 ஆயிரம் குடும்பங்களுக்கான இந்த நிதி. ஏற்கனவே உரிய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட்டது.

எஞ்சிய 6 கோடி ரூபாவும், தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் ஏழரைக்கோடி ரூபாவுமாக மொத்தம் பதின்மூன்றரைக் கோடி ரூபா

(6ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி தேர்தலைக் கண்காணிக்க

## சார்க் பிரதிநிதிகளை அழைக்கிறார் ஜே. ஆர்.

கொழும்பு டிச. 7

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புக் குழுவில் பணியாற்ற பிரதிநிதிகளை அனுப்பி வைக்கும்படி சார்க் அமைப்பு நாடுகளை ஜனாதிபதி ஜெயவர்த்தன கேட்டிருக்கிறார்.

—இப்படி ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

சார்க் அமைப்பில் ஏழு நாடுகள் உள்ளன.

அவையாவன; இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவுகள், பூட்டான், இலங்கை.

### 5 ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை:

## வவுனியா மாணவன் முதலிடம் பெற்றார்!

வவுனியா, டிச 7

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் வவுனியாப் பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒருவன் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளான்.

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் பூரணச்சந்திரன் அனுதர்ஷன் (10 வயது) என்பவரே அந்த மாணவனாவார். இவர் வவுனியா ரயில்நிலைய அதிபர் திரு இ.பூரணச்சந்திரன் தம்பதிகளின் மூத்த புதல்வராவார்.

ஆறும் ஆண்டுப்புலமைப்பரீட்சையில் யாழ் சென் ஜோன்ஸ் மாணவர் ஒருவர் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்றார் என்பது தெரிந்ததே. (ஒ 164)

### முச்சந்தி முரளி



உவையள் எப்பவோ குதிரையை ஓடவிட்டிட்டினம். இப்ப லாயத்தை மூடிறதைப் பற்றி பேசி என்ன பிரயோசனம்..!

## மண்ணெண்ணை விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 7

யாழ் மடத்தடி எரி பொருள் விற்பனை நிலையத்தில் இன்று மண்ணெண்ணை விநியோகிக்கப்படும்.

காலை 9-30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை விநியோகம் நடைபெறும். ஒருவருக்கு 10 லீற்றர் வரை மண்ணெண்ணை வழங்கப்படும். (ஒ)

## தேர்தல் பகிஷ்கரிப்பு

கொழும்பு, டிச. 7

ஜனாதிபதித் தேர்தலை நிராகரிப்பதாக தேசபக்தி மக்கள் இயக்கம் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

எமது இயக்கம் குறிப்பிட்ட ஒரு கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பதாக சுவரொட்டிகள் மூலம் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இது முற்றிலும் தவறானது.

—இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ஒ-எ)

## நூற்றியிருபது டிரான்ஸ்போமர் சேதம்

கொழும்பு டிச.7

தென் பகுதியில் 120 டிரான்ஸ்போமர்கள் மிகவும் மோசமாகச் சேதமாக்கப்பட்டுள்ளன

இலங்கை மின்சார சபைத் தலைவர் பேராசிரியர் கே. கே. வை டபிள்யு. பெரேரா இத் தகவலைத்தெரிவித்தார். (உ-எ)

### ★ தாதிகள் தெரிவு:

## நேர்முகப் பரீட்சை 9 ஆம் திகதிவரை நீடிப்பு

யாழ்ப்பாணம், டிச. 7

தாதிகள் பயிற்சிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் கொழும்பில் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளலாம்

இத் தகவலை சுகாதாரத் திணைக்களத்தின் யாழ் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் எஸ் கனகசபை நேற்றுத் தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சை நவம்பர் மாதம் 24, 25, 26 ஆகிய திகதிகளில் நடைபெற முன்னர் ஏற்பாடாகியிருந்தன.

எனினும் தபால்சேவை சீரின்மை காரணமாக நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் அத் திகதிக்கு முன் உரியவர்களுக்குக் கிடைக்கவில்லை. இது குறித்து, யாழ் சுகாதாரப் பணிப்பாளர் சுகாதார அமைச்சின் செயலாளருடன் நேற்றுத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார். இதனையடுத்து மாற்று ஒழுங்கு செய்யப்பட்டது (உ 10)

### ஜே.ஆரின் அறிவிப்பு:

## குதிரை ஓடிய பின்னர் லாயத்தைப் பூட்டும் செயல்

### சிறிமா அம்மையார் வர்ணனை

கொழும்பு டிச 7

டிசம்பர் 20 இல் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு 'குதிரை வெளியே ஓடிய பின்னர் லாயத்தின் கதவுகளைப் பூட்டுவதற்கு'' ஒப்பாகும்.

—இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்

அவர் மேலும் சொன்னதாவது:-

நாடாளுமன்றத்தை உடனே கலைக்க வேண்டும் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் கலைப்பதில் பிரயோசனம் இல்லை. இந்தத் தேர்தல் முடிந்த பின்னர் நான் தான் நாடாளுமன்றத்தைக்கலைப்பேன்; திரு. ஜெயவர்த்தன அல்லர்.

நான் ஜனாதிபதித்தேர்தலில் இருந்து வாபஸ் வாங்கப் போவதாகப் பிரதமர் கூறிவருகிறார். அதுதிட்டமிட்டபொய்க் கூற்று. போட்டியில் இருந்து பண்டாரநாயக்காக்கள் பின்வாங்கியதே இல்லை.

இனப் பிரச்சினைக்குத் தீர்வுக்கான எமது யோசனைகளைத்தமிழர் அமைப்புக்கள் அனைத்தும் வரவேற்றுள்ளன.

கொள்கையளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் எமது யோசனைகளை ஏற்றுள்ளனர் என்று தெரிகிறது.

யாழ்ப்பாணத்துக்குச் சென்று இந்த யோசனைகளை மக்கள்முன்னிலையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் படையில் முஸ்லிம்களுக்கு 50 வீதம்

### டிக்ஸிற்றிடம் அஷ்ரப் வலியுறுத்து

கொழும்பு, டிச. 7

தொண்டர் படைக்கு நியமிக்கப்படுபவர்களில் ஐம்பது சதவீதமானவர்கள் முஸ்லிம்களாக இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச் எம். அஷ்ரப் இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

நேற்று முன்தினம் இந்தியத் தூதுவர் திரு. ஜே என். டிக்ஸிற்றை ஜனாப் அஷ்ரப் சந்தித்தார். அப்போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார். அவர் விடுத்த ஏனைய கோரிக்கைகள் வருமாறு:-

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

முஸ்லிம் கிராமங்களில் தொடர்பு அதிகாரிகள் (Liaison Officer) நியமிக்கப்படவேண்டும். பிரசைகள் குழுக்கள் இல்லாத இடங்களில் இந்தத் தொடர்பு அதிகாரிகள் பிரசைகள் குழுக்களின் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும்.

இந்தியத் தூதுவருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கும் இடையிலான சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் வரை இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

## வவுனிக்குளத்தில் 8 ஜவான்கள் உயிரிழப்பு

வவுனிக்குளத்தில் திங்கட்கிழமை மாலை ஏற்பட்ட மோதல் ஒன்றில் இந்திய அமைதிகாக்கும் படையைச் சேர்ந்த எட்டுப்பேரும், போராளிகள் குழுவைச் சேர்ந்த 13 பேரும் கொல்லப்பட்டதாக இந்தியத் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் 6 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஜமகா 2000 C V. மண்ணெண்ணை, ரெபின் 1500 C V மண்ணெண்ணை ஜமகா 900 C V பெற்றோல் அன் ஓயில் விற்பனைக்கு உண்டு தொடர்பு: நீல் வீடியோ சென்ரர்; ஈசிமடலடபீச்ரோட், யாழ்ப்பாணம் 8041.

5 K V. A C, 230 V டீசல் ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு. நா சிவபாலமூர்த்தி, பாதிரி கோவிலடி லேன், கே. கே. எஸ். றோட், கொக்குவில். (8 62)

பாவித்த தளபாடங்கள் ஹோல் செற், Show Case, கண்ணாடி மேசை, நேசறி மேசை, பெற்றூல்மெச்ன் Baby Cot, சட்டிச் Singer Hand Machine மற்றும் பல உடன்மலிவுவிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (சென், பற்றிக்ஸ் சந்தி அருகாமையில்) (8060)

vespa ஸ்கூட்டர் 9 Sri தொடர், Honda-101 Sri தொடர் C 90) Sanyo T. V 27'' Canon மோட்டார் (ஓட்டமெற்றிக்) A-1, AE-1 கமராவுக்கு பொருந்தக் கூடியது. மினிபஸ்சிற்கு பொருந்தக்கூடிய 24 W Fan இரண்டும் விற்பனைக்கு உண்டு தொடர்பு: A தியாகராசா, 16, விதானையார் ஒழுங்கை, சுண்டிக்குளி, (8036)

### நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/357)

### இறைச்சிக்கோழி விநியோகம்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7686)

## தேவை

யாழ்நகரில் புதிதாகத் திறக்கப்படவிருக்கும் வைத்தியசாலைக்கு உதவியாளராக 2 பெண்கள் தேவை பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. வைத்திய அறிவுடையோருக்கு முதன்மை கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் 7-12-1988 முதல் 12-12-1988வரை ஏற்றுக் கொள்ளப்படும் விபரங்களுக்கு: விளம்பர இல. 9, C/o உதயன், யாழ்ப்பாணம். (8055)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்கு ஓர் பகுதிநேர எழுதுவினைஞர் தேவை சைவ ஆசாரமும், ஆங்கில அறிவும் உடையவராக இருத்தல் வேண்டும். ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர் விரும்பத்தக்கது. 15-12-88ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், சைவ பரிபாலன சபை. 450, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (C/859)

### உடன் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறீம் ஹவுஸ் ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவமிக்க வெயிட்டர்கள் உடன் தேவை. தொடர்பு:- யாழ் றிக்கோ சுவீற் அன் சிறீம் ஹவுஸ், 352, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (8042)

### சேவை

தமிழ் ஆங்கிலம் கட்டச்சு மற்றும் போஸ்டர், அச்சு வேலைகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். தயா அச்சகம். இல, 138, நாவலர் றோட், மனோகராச்சந்தி, யாழ்ப்பாணம் (C 551)

### வைத்திய சேவை

செங்கமாரி நாட்பட்ட வாதம், குடற்புண் (Ulcer), மாதர் ரோகங்கள் சொறி சிரங்கு மற்றும் ஏனைய சகல ரோகங்கட்கும் சிகிச்சையும், ஆலோசனையும் பெற்றுக் கொள்ளலாம் விசேடமாக அக்குபஞ்சர் சிகிச்சையும் அளிக்கப்படும். ராஜ் மெடிக்கல் கிளினிக், சென்பற்றிக்ஸ் வீதி, லீனஸ் கட்டிடம் (மேல் மாடி), யாழ்ப்பாணம் (8054)

### திருமண சேவை

இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் வேலை செய்பவர்களுக்கு பணமக்கள் தேவையாயின தகுதிக்கும், தரத்திற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும். சாதகக் குறிப்பும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: 'சாயி மங்கள' 32 இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (80 6)

### சிகிச்சை

ஞாயிறு நலம் கருதி சனிக்கிழமைகளில் மட்டும் சகல நாட்பட்ட நோய்களுக்கு ஆலோசனை சிகிச்சை பெறலாம். ஜெயந்தி கிளினிக், தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. (8038)

### கல்வி

G C E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதபாடத்தினை புதிய பழைய திட்டத்திற்கமைய 21 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் 2 மாதத்திற்குள் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கு வீடுகளில் சென்று கற்பிக்கப்படும். எனது வீட்டிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி (8040)

### சமூகக்கல்விப் பயிற்சி

ஆண்டு 11, 10, 9, 8, 7, 6 வகுப்புக்குரிய சமூகக்கல்விப் பயிற்சிகள் வினா விடைகள் - வெளிவந்துவிட்டன ஆக்கியோன்: க. குணராசா- எம் ஏ. விற்பனையாளர்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (7715)

### சுஜோரா ரவல்ஸ்

அமெரிக்கா (America விற்குப் பிரயாணம் செய்வதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது செல்ல விரும்புவோர் சாமதியாது 7ஆம் திகதிக்குப் பின்னர் சுஜோராஸ் ஸ்தாபனம், இல 21, வேம்படிரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (C/ 861)

### தவறிவிட்டது

சிவலோகநாதக் குருக்கள் கிருபாகரன் ஆகிய எனது அடையாள அட்டை இல 613131043 V 25-11-88 அன்று தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8065)

நடராசா - குமாரசாமி இல 183410601V குமாரசாமி ஞானம்மா இல. 347061620V ஆகியோரின் அடையாள அட்டைகள் யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ந. குமாரசாமி, செட்டியார்மடம் அராலி வடக்கு வட்டுக்கோட்டையில் தொடர்பு கொள்ளவும் (8037)

சுழிபுரம் பண்ணாகத்தைச் சேர்ந்த செல்வி புஸ்பலக்ஷ்மி பொன்னம்பலம் என்பவருடைய அடையாள அட்டை இரு வாரத்துக்கு முன்னர் மூளாய்க்கும் சித்தன்கேணிக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் சுழிபுரம் பிரதானவீதி 'ஸ்கைலாக் ஏஜென்ஸி'யில் ஒப்படைக்கவும் (8039)

### தெரிவு

மண்டைதீவு, டிச. 7

வடஇலங்கைத் தமிழ் பேசும் உபதபாலதிபர் சங்கத்தின் நடப்பு வருடத்தலைவராக அல்லைப்பிட்டி உபதபால் நிலைய அதிபர் திரு. செ. இரத்தினசபாபதி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (இ 88)

# மன்னார் விவசாயிகளுக்கு விதை நெல்-உரம் உதவி

## அரசாங்க அதிபர் பாராட்டு

மன்னார், டிச. 7

மன்னார் மாவட்டம் ஒரு விவசாயப் பிரதேசம். இதில 68 சத வீதமானோர் நெற் செய்கையைத் தமது பிரதான தொழிலாக மேற்கொண்டுள்ளனர். இவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக போதிய வருமானம் இல்லாமல் கஷ்டப்படும் போது துயர் துடைப்பு சங்கங்கள் குறிப்பறிந்து நேரகாலத்துடன் 4000 விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கு தேவையான விதை நெல், அடிஉரம், மேற்கட்டுஉரம் போன்றவற்றைவழங்குவது ஓர் அரிய முயற்சியாகும். இச்சங்கத்தின் கட்டுக்கோப்பான சேவையை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

விடத்தல்தீவு, இலுப்பைகடவை விவசாயிகள் 600 பேருக்கு விதை நெல், உரம் போன்றவற்றை விநியோகிக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் அரசாங்க அதிபர், திரு. எஸ் தர்மபாலன் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்.

இச் சங்கத்தின் செயலாளர், திரு. சிங்கிலேயர் பீற்றர் தலைமையில் சங்க ஊழியர்கள் மாவட்டத்தில உள்ள 12 சமநல சேவை நிலயத்தில் உள்ள 4000 விவசாயிகளுக்கு துரித கதியில் விதை நெல் உரம் போன்றவற்றை விநியோகித்து வருகின்றனர்.

மேலும் இக் காலபோகத்தில் மேட்டு நிலச் செய்கையில் ஈடுபட்டு இருக்கும் பாதிக்கப்பட்ட குறிப்பாக இந்தியாவிலிருந்து சாயம் திரும்பிய விவசாயிகளுக்கு பழமரக் கன்றுகள், மிளகாய், உரம் போன்றவற்றை சிறுவர் பராமரிப்பு நிதியம், வெயார் ஸ்தாபனம் போன்றவற்றின் உதவியுடன் விநியோகித்து வருவதுடன் கமக்காரர் பயிற்சி வகுப்புக்களையும் விவசாய இலாகா உத்தியோகத்தர் உதவியுடன் நடத்தி வருகின்றனர்.

இச் சங்கத்தின் சமநலசேவை உதவி ஆணையாளர் திரு கேசுப்ணஷ் விவசாய பகுதி உதவி விர்வாக்கப்பணிப்பாளர் திரு எஸ். தட்சணாமூர்த்தி அவ்வப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோர் உதவி வருகின்றார்கள். (இ)

## மக்கள் முகம்

### மனோன்மணி அம்பாள் சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம் டிச 7

புங்குடுதீவு குறிகாட்டுவானில் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் சனசமூக நிலையம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- இ. தவராசன், உபதலைவர்:- த. தெய்வேந்திரம், செயலர்:- நா சிவராசா, உபசெயலர்:- ச. தேவராசா, பொருளாளர்:- ச. ஜெயசங்கர், விளையாட்டுத் தலைவர்:- ச. ரவிசங்கர். (ச)

# சூரன்போர்

கஜமுகன் சூரன்போர் அருள்மிகு நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலில் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

சோ நந்தகோபாலக் குருக்களின் விசேஷ பூஜையுடன் மாலை 4மணியளவில் சூரன்போர் ஆரம்பமாகும் (இ 160)

# நாடக விழா

வடமராட்சி, டிச 7

வல்வை நெடியகாட்டு கவிஞன் வளர்ச்சி நிதிக்கான நாடகவிழாவும், ஓவியக்கலைஞர் பட்டமளிப்பு விழாவும் யோகநாயகி திரையரங்கில் நடைபெற்றன.

விழாவில் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு போ. பாலசுப்பிரமணியம் 'ஓவியக் கலாநிதி' என்ற பட்டமளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (இ-160)

# புரட்சிப் படையினர் இராணுவச் சிறையில்

ஆர்ஜன்டீனாவில் புரட்சி நடத்திய இராணுவ வீரர்கள் இராணுவச் சிறையில் அடைக்கப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று தினங்களாக அரசுக்கு எதிரான புரட்சியில் இவர்கள் ஈடுபட்டனர் என்பது தெரிந்ததே (எ)

# ஒழுக்கமும் வழிகாட்டலும் இன்றி மாணவர்கள் திசை திருமபுகின்றனர்

திறமைசாலிகளை உருவாக்கி அவர்களை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் உன்னதபணி ஆசிரியர் பணியாகும்.

போதிய வழிகாட்டலும் ஒழுக்கமும் இன்மையால இன்று மாணவ சமுதாயம் பல தவறான வழிகளில திசை திரும்புகின்றனர்.

ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரினதும் நடவடிக்கைகளை அவதானித்து சபீட்சம் மிக்க எதிர்காலம் உருவாக உழைக்க வேண்டும்.

நெடுந்தீவு றோ. க. ஆண்கள் வித்தியாலய ஆசிரியர் ஒன்று கூடல் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் நெடுந்தீவுப் பங்குத்தந்தை வண. பிதா எம். பி அமிர்தகுமார் இப்படிக்கூறினார்.

வித்தியாலய அதிபர் அருட்செல்வி எம். லொறன்ஸ் இந் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

மகா வித்தியாலய உதவி அதிபர் திரு. டபிள்யூ அரியநாயகம் பேசுகையில் கூறியதாவது

நெடுந்தீவின் கல்வி வீழ்ச்சிக்கு ஆசிரியர் பற்றாக்குறை ஒரு காரணமாக இருந்தது.

புதிய நியமனங்களின் கீழ் இப்போது 24ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருப்பதால் கல்வித்துறையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும்

இப்படி அவர் கூறினார். (ச-111)

# குடும்பவருமானம், ஆரோக்கியம்பெற வீட்டுத் தோட்டம் அமைக்குக.

கரவெட்டி, டிச 7

வீட்டுத் தோட்டச் செய்கை மூலம் நாம் குடும்ப ஆரோக்கியத்தை பெறுவதுடன் குடும்ப வருமானத்தையும் பெருக்குகிறோம்

எனவே ஒவ்வொரு குடும்பத்தினரும் வீட்டுத் தோட்டம் அமைத்தல் வேண்டும்.

இவ்வாறு புலோலி விவசாயப் போதனாசிரியர். திரு சி கதிர்காமநாதன் கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற பெரும்போக பயிர்ச் செய்கைக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

"வீட்டுத் தோட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படும் பலாபலன்களையும் உணர்ந்து செயற்படும் போது அதற்கான ஊக்குவிப்பை விவசாயத் திணைக்களம் வழங்கத் தயாராக உள்ளது.

என்றும் கூறினார்

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் திவாகரன்

திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோயில் 23, திருஞானசம்பந்தர் வீதியைச் சேர்ந்த ராஜேஸ்வரகுரு-மனோகரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் செல்வன் திவாகரன் தனது முதலாவது பிறந்த தினத்தை கந்தரோடையிலுள்ள தனதில்லத்தில் (7-12-1988) இன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, பாட்டி, சந்தரோடை அம்மம்மா, தாத்தா, சுவிஸ்லாந்து மாமா, கந்தரோடை மாமா, சித்தி மச்சான் சங்கர், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் முத்துக்குமரன் அருள் பெற்று பல கலைகளும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

வாழ்க! வளர்க!!

(C/472)

# ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம் கொக்குவில்

## பதவி வெற்றிடம்

மேற்படி ஆலயத்திற்கு கணக்குப்பதிவு அலுவலக வேலைகளில் அனுபவமுள்ள இலிகிதர் தேவைப்படுகிறார். ஸ்ரீசாயிதுர்க்காதேவி ஆலயத்திற்கு அண்மையில் வசிப்பவராகவும் அரசாங்க/ கூட்டுத்தாபன/ கூட்டுறவு/ தனியார்துறையிலிருந்து இளைப்பாறியவராகவும் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரர் வயது, கல்வித் தகைமைகள், முன் அனுபவம் எதிர்பார்க்கும் மாதாந்த வேதனம் (அலவன்ஸ்) ஆகிய விபரங்கள் கொண்ட விண்ணப்பங்களை 28 12 1988 க்கு முன் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நா. நித்தியானந்தன்
உப தலைவர்/பதில் செயலாளர்

15/9, பொற்பதி வீதி,
கொககுவில். (8181)

# வழங்குநர்களைப் பதிவு செய்தல்-1989

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1989 ஆம் ஆண்டுக்குக் கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் பதிவு செய்வதற்காக வியாபார ஸ்தாபனங்களிடமிருந்து 30-12-1988 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவு செய்யும் கட்டணமாக அவற்றுக்கெதிரே குறிப்பிட்டுள்ள தொகையை 'விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்' என்ற பெயரில் அனுப்பி வைக்கவேண்டும்.

| பொருட்கள் / சேவைகள் | பதிவுக் கட்டணம் |
|---|---|
| 1. காகிதாதிகள் - | ரூபா. 25, 00 |
| 2. சுகாதார சேவைக்கான பொருட்கள் - | ரூபா. 25, 00 |
| 3. அச்சிட்ட படிவங்கள், பதிவேடுகள் வழங்குதல் - | ரூபா. 25, 00 |
| 4. மின்சாரப் பொருட்கள் - | ரூபா. 50, 00 |
| 5. மின்சாரத் தூண்கள் - | ரூபா. 50, 00 |
| 6. சீருடைக்கான துணிகள், சப்பாத்துக்கள் - | ரூபா. 25, 00 |
| 7. அலுவலகத் தளபாடங்களும் உபகரணங்களும் - | ரூபா. 25, 00 |
| 8. மிருக வாகன வரித் தகடுகள் - | ரூபா. 25, 00 |

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்.
வலிகாமம் தெற்கு, பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். 05. 12. 1983. (C/885)


# மொத்த புடவை வர்த்தகர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

பலதரப்பட்ட போலி 'ஷேர்ட்டிங்ஸ்' 'சீமா ஷேர்ட்டிங்ஸ்' என சந்தைப்படுத்தப்படுவதாக அறிய வந்துள்ளோம். எனவே எமது அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களின் பெயர்களையும் முகவரிகளையும் இங்கே குறிப்பிடுகின்றோம்.

"சீமா" ஷேர்ட்டிங்ஸ்ஸை இவர்களிடம் மாத்திரமே கொள்வனவு செய்து கொள்ளுங்கள். எமது 'சீமா' ஷேர்ட்டிங்ஸ் 1-12-1988 தொடக்கம் 'சீமா' லேபல் பொறிக்கப்பட்டு வெளிவருகிறது இதனை அவதானித்து எமது ஷேர்ட்டிங்ஸை கொள்வனவு செய்யுங்கள்:

## எமது விநியோகஸ்தர்கள்:

### யாழ்ப்பாணம்:

1. லேடன் காமன்ஸ், மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
2. T. குமாரசாமி டெக்ஸ்டைல்ஸ், 42, 44, பெரியகடை, யாழ்ப்பாணம்.
3. E. விஜயரத்தினம், 'மைலண்ஸ்' கட்டடம் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

### கொழும்பு:

1. இரத்தின ஸ்ரோர்ஸ், 180/4, கெய்சா வீதி, கொழும்பு.

## சீமா சில்க் இன்டஸ்றீஸ்

லிமிட்டெட்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தந்தி: "சீமா சில்க்" தொலைபேசி: 23170.

— உயர்ந்த ரக ஷேர்ட்டிங்ஸ் தயாரிப்பாளர் —

(8059)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலிருந்து கொழும்புக்கு 800 தபால் பொதிகள்

## வவுனியாவிலும் தொலைபேசி துண்டிப்பு

வவுனியா, டிச. 7

வடக்கின் பல பகுதிகளிலிருந்தும் வவுனியாவுக்குக் கொண்டுவரப்பட்ட 800க்கும் மேற்பட்ட தபால் பொதிகள் ஸ்ரீ லங்கா இராணுவப் பாதுகாப்புடன் சனிக்கிழமை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

கொழும்பிலிருந்து வடக்கிற்கான தபால் பொதிகளை ஏற்றி வந்த பஸ்களிலேயே இவை கொண்டு செல்லப்பட்டன.

கொழும்பிலிருந்து வவுனியா வந்து சேர்ந்த தபால் பொதிகள் வவுனியா பிராந்திய தபால் அத்தியட்சகர் திரு ஏ. சிவபுரத்தரசன், வவுனியா பிரதம அஞ்சலதிபர் திரு. எப். பொன்னையா ஆகியோரின் மேற்பார்வையில் தபால் பகுதி ஊழியர்களின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, பூநகரி, மாங்குளம், மன்னார் ஆகிய பகுதிகளுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டன.

கொழும்புக் தபால்கள் துரிதமாகத் தரம் பிரிக்கப்பட்டு வவுனியா மாவட்டப் பகுதிகளில் சனிக்கிழமையே விநியோகம் செய்யப்பட்டன.

இதனிடையில் சில தினங்களே இயங்கிய தொலைபேசிகள் மீண்டும் பழுதடைந்துள்ளதனால் வவுனியாவுக்கும் வெளி மாவட்டங்களுக்கும் இடையிலான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

வவுனியா மடுக்கந்தை தொலைபேசி பரிவர்த்தனையில் ஏற்பட்டுள்ள பழுதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-164)

### சடலம் அடையாளம் காணப்பட்டது

குருநகர், டிச 7

இம்மாதம் 2 ஆம் திகதி மன்னார் ஊசிமுக்கன் கடற்கரையில் ஒதுங்கிய சடலம் குருநகரைச் சேர்ந்த இராசதுரை குசைதாசன் (வயது 22) என்பவருடையது என்று அடையாளம் காணப்பட்டு அங்கேயே அடக்கம் செய்யப்பட்டது.

இவர் கடந்த மாதம் 28 ஆம் திகதி பாலைதீவுப் பகுதியில் கடல் தொழிலில் ஈடுபட்டிருக்கையில் வலிப்புக்கு உள்ளாகி கடலில் வீழ்ந்தாரென்ற செய்தி 'உதயன்' 30-11-88 இதழில் பிரசுரமாகியிருந்தது தெரிந்ததே.

கடலில் வீழ்ந்து நான்கு தினங்களுக்குப் பிற்பாடே இவர் சடலம் மீட்கப்பட்டு சடலம் உறவினர்களால் நல்லடக்கம் செய்யப்பட்டது. (இ-51)

# யாழ் பல்கலைக்கழக கட்டட புனரமைப்புக்கு ரூ. 2 கோடி நிதி உதவி

யாழ்ப்பாணம், டிச 7

யாழ் பல்கலைக்கழகத்தின் கட்டடங்களைப் புனரமைப்பதற்கு இரண்டு கோடி ரூபா கிடைத்திருக்கிறது.

இந்த நிதிமூலம் தற்போது பல்கலைக்கழக கட்டடங்கள் துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்கு முன் இந்த நிதியை முழுமையாகப் பயன்படுத்தி புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அல்லது நிதி அரசாங்கத்தால் திருப்பி பெற்றுக்கொள்ளப்படும் என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளையில் புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக அறுபது லட்சம் ரூபா கிடைத்திருக்கிறது.

சர்வதேச அபிவிருத்தி ஏஜென்சியின் உதவித் திட்டத்தின் கீழ் இரண்டரைக் கோடி ரூபா கிடைத்திருக்கிறது.

யாழ் பல்கலைக்கழக ஆய்வு கூடங்களுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்த இரண்டரைக் கோடி ரூபாவும் பயன்படுத்தப்படும். (இ-ஐ)

★ அனுராவுக்கு

# கிடைக்கப்போகும் பரிசு எப்படி இருக்கும்?

கொழும்பு, டிச 7

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்காவுக்கு பொதுத்தேர்தல் தினமன்று கிடைக்கப்போகும் பரிசு என்னவாக இருக்கும்?

கல்யாணப் பரிசாக நிச்சயம் இருக்காது

ஆனால் நிச்சயம் பிறந்தநாள் பரிசாக இருக்கப்போகிறது.

வியப்படையாதீர்கள்!

பொதுத் தேர்தல் நடத்துவதற்காக ஜனாதிபதி அறிவித்திருக்கின்ற திகதி பெப்ரவரி 15. திரு. அனுரா பண்டாரநாயக்காவின் பிறந்த திகதியும் அன்றுதான்

அனுராவை கொழும்புச் செய்தியாளர் ஒருவர் இதுபற்றிக் கேட்டார்.

"இதைவிட ஜனாதிபதி ஜெயவர்த்தனா எனக்குச் சிறந்த 'பிறந்தநாள்' பரிசைக் கொடுக்க முடியாதே"

பலத்த சிரிப்பின் மத்தியில் திரு அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார். (ஒ எ)

மயிலிட்டியில்

# 67 மீனவக் குடும்பங்கள் இலவச வலைகள் பெற்றன

காங்கேசன்துறை டிச. 7

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மயிலிட்டிப் பகுதியைச் சேர்ந்த 67 குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன.

மயிலிட்டிக்கரை பிரசைகள் குழுவின் கோரிக்கையின் பேரில் வலி-வடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு வலைகளை விநியோகிக்க ஏற்பாடு செய்திருந்தது.

இதற்கமைய மயிலிட்டி கரையோரப் பகுதியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு தலா 3 மீன்பிடி வலைகள் வீதம் வழங்க அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நிதியுதவி அளித்திருந்தது.

ஆனால் தற்போது மின்சாரம் தடைப்பட்டு மீன்பிடி வலை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதால் ஒரு பகுதி வலைகளையே பெற்றுக்கொள்ள முடிந்தது.

இதன் காரணமாக முதற் கட்டமாக 67 குடும்பங்களுக்கே வலைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் இடம் பெற்ற இந்த வலைகள் கையளிப்பு வைபவத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சேர்ந்த திரு இரவீந்திரன் வலி-வடக்கு பிரஜைகள் குழு ஒன்றியத் தலைவர் திரு. வி. எஸ் கணேசலிங்கம், செயலாளர் திரு. எஸ் சிவமகாராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ - 68)

# கூட்டுணர்வை வளர்க்க மைதானமே சிறந்தது

### மெய்வல்லுநர் போட்டியில் பதில் கல்விப் பணிப்பாளர் பேச்சு

கொக்குவில் டிச 7

ஆசிரியர்களாகிய நீங்கள் உங்கள் உடல் வன்மையைக்காட்டியதோடு கூட்டுணர்வையும் காட்டினீர்கள். வெவ்வேறு மாவட்டங்களிலிருந்து ஆசிரிய பதவிக்குத் தெரிவாகி வந்தபோதிலும், நாம் எல்லோரும் ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்வைக்காட்டினீர்கள் இதுபோன்ற உணர்வை வளர்ப்பதற்கு வகுப்பறையை விட மைதானமே சிறந்தது.

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரிய சேவை முன் பயிற்சிநெறி ஆசிரியர்களுக்கான இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றியபதில் கல்விப் பணிப்பாளர் திரு. கு சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. மு. இராமலிங்கம் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையில் கூறியதாவது: ஆசிரியர்களாகிய நாம் மாணவர்களுக்கு எதைப் போதிக்கப் போகிறோமோ, அதை நாமும் கடைப்பிடிக்கவேண்டும். போதனைகள் சாதனைகளாக இருக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (ச-69)

# முல்லைத்தீவில் பலத்த பாதுகாப்பு

முல்லைத்தீவு டி - 7

முல்லைத்தீவுப்பகுதியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன (ச-92)

ஏழாலை தெற்கு திருச்சபை

# சாரம் உள்ள உப்பு போல ஜீவன் உள்ள சபையாக வளர்கிறது

## நூற்றாண்டு விழாவில் உரை

சுன்னாகம், டிச. 7

எரியாது இருக்கும் ஆயிரம் மெழுகுதிரிகளிலும் எரியும் ஒரு மெழுகுதிரி அதிகம் பிரயோசனமானது.

சாரம் உள்ள உப்புப் போலவும் கடுகு விதைக்கு ஒப்பானதாகவும் ஏழாலை தெற்குத் திருச்சபை ஜீவனுள்ள சபையாக வளர்ந்து வருகிறது.

ஏழாலை தெற்கு தென்னிந்திய திருச்சபையின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றுகையில் பிஷப் டி. ஜே அம்பலவாணர் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் பேசுகையில் "வெளிநாட்டிலிருந்து கிறிஸ்தவ சமயத்தை எம் மத்தியில் பரப்புவதற்காக வந்தவர்கள் தமது பணி செம்மையுற கல்வி அறிவுள்ள சூழலையே பெரிதும் விரும்பினர்.

இந்த வகையில் வலிகாமம் வடக்குப் பகுதி கிறிஸ்தவ ஊழியர்களினால் கவரப்பட்டபோது அப்பகுதி மக்களும் பெரிதும் பயனடைந்தனர்.

கல்வி நிலையங்கள் பல அங்கு உருவாக்கப்பட்டதனால் திரு சி வை. தாமோதரம்பிள்ளை போன்ற கல்விமான்களும் உருவாகினார்கள்.

அன்றுதொட்டு இன்றுவரை வலிகாமம் வடக்குப் பகுதியில் கல்வி மணம் கமழ்ந்து கொண்டிருக்கின்றது.

— இப்படி அவர் கூறினார்

சுன்னாகம் பங்குத் தந்தை வண. பிதா யோகராசா. சைவப் பெரியார் திரு. சிவசண்முகவடிவேல, வண. ஜெபநேசன், வண எம். தேவதாசன் உட்பட பலர் உரையாற்றினர். (ச-27)

# ரெலோ காரியாலயங்கள்

மாங்குளம், டிச 7

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) கட்சிக் காரியாலயங்கள் வவுனியா, முல்லைத்தீவு, மாங்குளம் ஆகிய பகுதிகளில் திறக்கப்பட்டுள்ளன.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மாங்குளம் பகுதிப் பொறுப்பாளர் திரு. ராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மற்றும் ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியும் தமது காரியாலயத்தை மாங்குளத்தில் திறந்துள்ளது. (ச-94)

# கிராமப்புற பாடசாலைகளுக்கு சாரதா சேவாச்சிரமம் உதவி

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ளது.

வடமராட்சிக் கோட்டக்கல்விப் பிரிவின் கீழ் உள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலையான அல்வாய் இந்து தமிழ்ப் பாடசாலைக்கு சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் சமூகசேவகி செல்வி சித்ரா அருள்நந்தி வடமராட்சிக் கோட்டக் கல்வி அதிகாரி செல்வி திலகவதி பெரியதம்பி ஆகியோர் சென்று சகல மாணவர்களுக்கும் வாரந்தோறும் பால்மா கரைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

அப்பாடசாலையில் கல்வி கற்கும் 27 மாணவிகளுக்கு சுவாமி சித்ரூபானந்தா சீருடை வழங்கினார்.

ஆண்பிள்ளைகளுக்குரிய துணிவகைகளைச் சமூக சேவகி செல்வி சித்ரா அருள்நந்தி வழங்கினார். (ச-118)

# பல் வைத்தியர் இல்லை

முல்லைத்தீவு டிச 7

முல்லைத்தீவு மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் சென்ற ஆறு மாதகாலமாக பல் வைத்தியர் இல்லை

இதனால் பற்சிகிச்சை பெறுவோர் பல சிரமத்தின் மத்தியில் யாழ்ப்பாணம்- வவுனியா ஆஸ்பத்திரிகளுக்குச் செல்ல வேண்டி உள்ளது. (ச-92)

# அலுவலகங்கள் இடம் மாற்றம்

வேலணை டிச 7

வேலணை. வங்களாவடியில் இயங்கி வந்த யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் வேலணை உப அலுவலகம். ஆயுள்வேத வைத்தியசாலை. பொதுசன நூல் நிலையம் ஆகியவை வங்களாவடிச் சந்திக்கு அருகாமையில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளன.

மேற் கூறிய அலுவலகங்களைக் கொண்ட கட்டடத்தில் அமைதிப் படை முகாம் இட்டிருப்பதினாலேயே இந்த இடம் மாற்றம் நடைபெறுகிறது. (ச-176)


உ

சிவமயம்

## குருக்கள் தேவை

யாழ் மாவடி ஞானவைரவர் கோயிலுக்கு 3 காலப் பூஜை செய்வதற்கு குருக்கள் தேவை. தகுதிக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். 15 ஆம் திகதிக்கு முன்பு நேரில் வரவும்

சி. முத்துக்குமாரு,
175, K. K S ROAD,
JAFFNA.

(8061)



## கேள்விப் பத்திரங்கள் - 1989

எமது விற்பனை அபிவிருத்தித்திணைக்களத்தால் 1989ம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்குரிய ஆஸ்பத்திரிகளுக்குப் பாண், விறகு போன்ற பொருட்கள் விநியோகம் செய்வதற்கும், வாகன சேவைக்கும் கேள்விகள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பப் படிவங்களும் விபரங்களும் எமது பணிமனையில் நேரடியாகவோ தபால் உறையினை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

இவ் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து எமது பணிமனைக் கேள்விப்பத்திர பெட்டியில் இட்டோ அல்லது பதிவுத் தபால் மூலமோ 20-12-1988 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

சு சண்முகரத்தினம்,
பிராந்திய முகாமையாளர்,
வடபிராந்தியம்.

விற்பனைத் திணைக்களம்.
250, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(C/883)



## நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி-யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல் 1989

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள் இறைச்சிக்கடைகள் 1989 ஆம் ஆண்டு தை மாசம் 1 ஆம் திகதி தொடக்கம் 1989 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் 14 - 12 - 1988 ஆம் திகதி முற்பகல் 10 . 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் நல்லூர் பிரதேச சபை செயலாளரால், கேள்வி வைப்பு - கேள்விப் பத்திரப்பணம் ஆகியன செலுத்தியதின் பேரில் 12 - 12 - 1988 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை வழங்கப்படும் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 14 12 - 1988 ஆம் திகதி முற்பகல் 10 . 00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக மூலப்பிரதியை "விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை" திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனவும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்" உள்ளூராட்சித் திணைக்களம், கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் எனவும் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும், அல்லது நேரில் அலுவலக கேள்விப் பெட்டியில் போடலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "இன்ன குத்தகைக்கான கேள்வி 1989" என எழுதப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர், கேள்வி அறிவித்தல் நிபந்தனைக்கமைய குத்தகையை நடாத்துதல் வேண்டும். நிபந்தனைகளில் ஏதாவதொன்றை மீறுமிடத்து எவ்வித நட்டஈடுமின்றி குத்தகை உரிமை இரத்துச் செய்யப்படும். எந்தக் கேள்வியையும் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு வேறு விபரங்கள் தேவைப்படின் நல்லூர் பிரதேச சபையில் பெற்றுக்கொள்ளலாம்.

கந்தையா சண்முகநாதன்,
விசேட ஆணையாளர், நல்லூர் பிரதேச சபை,
உதவி அரச அதிபர், நல்லூர்

பிரதேச சபை தலைமைச் செயலகம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
1988-12-06

| இல. | குத்தகையின் தன்மை | கே. ப. பணம் | கே. வை. பணம் | மதிப்பிடப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 25.00 | 500 00 | 40,000/- |
| 2. | கோண்டாவில் கிழக்குச் சந்தை | 25 00 | 100.00 | 500/- |

(C 471)



# North Lanka College of Medical Practitioners

(Incorporated by Act No. 45 of 1988)

Applications are invited from qualified students wishing to follow a course of study and training in Medicine leading to a M. B B S Degree at the North Lanka Medical College, Jaffna established and run by the above incorporated body. Applications should be made in the prescribed form which could be obtained at the College Office at No 164 Fourth Cross Street Jaffna on payment of Rs 100 00. Requests for Application forms by post should be accompanied with Postal or Money Order for Rs 100 00 drawn in favour of the College upto 20 01-1989 All completed Application forms should be handed at the office or sent under Registered post to the Director to reach him on or before 31st January, 1989.

Secretary
N. L. C. M. P.

(C-870)



## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.

## வழங்குனர்களைப் பதிவு செய்தல் - 1989

கீழ்க்காணும் விடயங்களுக்கு வலி கிழக்குப் பிரதேச சபையோடு தங்களைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வியாபார ஸ்தாபனங்கள்/ உற்பத்தியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைப் பதிவுத் தபால் மூலம் "விசேட ஆணையாளர் வலி கிழக்குப் பிரதேச சபை நீர்வேலி" என்ற விலாசத்திற்கு 20 12- 1988 க்கு முன்னர் அனுப்பி வைக்கலாம்.

அந்த விடயங்களுக்கு நேரே குறிப்பிடப்பட்டுள்ள பதிவுக் கட்டணத் தொகையை காசோலை/ தபால் கட்டளை மூலம் விண்ணப்பத்தோடு செலுத்தலாம்.

| | | பதிவுக் கட்டணத் தொகை |
|---|---|---|
| 01 | மின் வழங்கல் பொருட்கள் | 50 00 |
| 02 | வலுவூட்டப்பட்ட மின்கம்பங்கள் வழங்கல் | 50 00 |
| 03. | காகிதாதிகள் / அச்சிடப்பட்ட படிவங்கள் | 50 00 |
| 04. | சுகாதார பொருட்கள் | 50 00 |
| 05 | கோலவுடை துணிகள் | 50 00 |
| 06 | பாதணிகள் | 50 00 |
| 07. | மின் கருவிகள் (Tools) | 50. 00 |

க. சுரேந்திரா,
விசேட ஆணையாளர்,

வலி, கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம்.
நீர்வேலி.

C/882


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் தரம் I, II. III, போட்டிப் பரீட்சைக்கான வெளியீடு

"பொது உளச்சார்பும் கல்வி முகாமைத்துவமும்"
விலை ரூபா 35/50.

✶ பொதுவிவேகம் ✶ பொது அறிவு
✶ கிரகித்தல் ✶ விடய ஆய்வு
✶ கல்வி முகாமைத்துவம்
✶ கடந்தகால வினு தாள்கள்
✶ டிப்ளோமா பரீட்சை
✶ ஆசிரியர் பரீட்சை
✶ S L. E. A. S. பரீட்சை

ஆகியவற்றை உள்ளடக்கி வெளிவந்துள்ளது.
யாழ் குடாநாட்டிலுள்ள சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்
பரீட்சை பின்போடப்பட்டுள்ளதால் வாங்கிப் பயன்பெறுங்கள்.

வெளியீடு:
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/881)

FORTUNA ENTERPRISES
வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்
Labour Licence No: 79

1, தைவான்
தொழிற்சாலைத் தொழிலாளர்
(Unskilled Factory Workers)
சம்பளம் — ரூபா 12, 000/ +
இருப்பிட வசதி
(ஆங்கில அறிவு அவசியமானது)
வயது - 22 — 32

2. குவைத்
தொழிலாளர் Labourers
சம்பளம் 30 KD — 33 10 +
இருப்பிடவசதி
முற்பணம் அறவிடப்படமாட்டாது.

நாடவேண்டிய முகவரி:-
யாழ்ப்பாணப் பிரதிநிதி
இ. விஸ்வேஸ்வராயன்
3 ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.
(C/878)

## அமரர் ஜேம்ஸ் இரத்தினம் ஓர் அறிவுக் களஞ்சியம்

### பிஷப் அம்பலவாணர் உரை

யாழ்ப்பாணம், டிச. 7
காலஞ்சென்ற மூதறிஞர் ஜேம்ஸ் இரத்தினம் ஓர் அறிவுக் களஞ்சியம் ஆராய்ச்சித் துறையின் ஜீவசக்தி பல்கலைக் கழகம் புகுந்து பட்டம் பெறவிடினும் அவர் ஒரு பல்கலைப் புலவராக விளங்கினர்.

திருநெல்வேலி ஈவின் இரத்தினம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற மூதறிஞர் ஜேம்ஸ் இரத்தினத்தின் திருஉருவப்பட திரை நீக்கம் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் பெருமது பிஷப் டி. ஜே. அம்பலவாணர் மேற்கண்டவாறு கூறினர்.

பிஷப் அம்பலவாணர் தனது உரையில மேலும் கூறியதாவது;

'அமரர் இரத்தினம் நாம் கடைப்பிடிக்க வேண்டியசில நெறிகளைப் பின்பற்றினர்.

வருங்காலச் சந்ததியினருக்காகத் தனது செல்வம் முழுவதையும் புத்தகத்துக்கே செலவிட்டார்.

எம் நாட்டில் பல கல்விமான்கள் பணம் சம்பாதிப்பதற்காக வெளிநாட்டில் குடியேறியுள்ளனர். இவர் அப்படிச் செய்யவில்லை

இந்நாட்டிலே இருந்து பல ஆய்வுகளை நடத்தி தமிழின் தொன்மையை வெளிநாட்டவருக்கு வெளிப்படுத்தினர்.

இவர் என்றுமே விளம்பரத்தை விரும்பியதில்லை' எனக் கூறினர்.

யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் கலாநிதி சிற்றம்பலம் பேசுகையில்-

'அமரர் ஜேம்ஸ் இரத்தினம் ஓர் நிறைந்த மனிதன்

எக்கருமத்தையும் சிறப்பாகவும் நிறைவாகவும் செய்பவர்.

அவர் ஓர் ஜமீந்தாராகவே வாழ்ந்தார்.

அவர் பணத்தைச் சட்டைப்பையில இருந்து எடுக்கும்பொழுது கசக்கி அள்ளுவார்.

தகுதி அறிந்து தானம் கொடுப்பார்.

இக் குணநியங்கள் என்னை வெகுவாக அவர்பால் ஈர்த்தது' எனச் சொன்னர்

யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னைநாள் அதிபர் திரு இராஜன் கதிர்காமர் பேசுகையில்-

'அமரர் ஜேம்ஸ் இரத்தினம் தனது புத்தகங்கள் முழுவதையும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வழங்கினர்.

அவரின் நன்கொடை இன்று தமிழினத்தின் சொத்தாகி விட்டது.

அவர் யாழ்ப்பாணத்தையும், யாழ்ப்பாணக் கல்லூரியையும் திருச்சபையையும் என்றென்றும் நேசித்தார்.

இடபடி அவர் கூறினர். (-ச)

### மன்னிப்புக் கேட்க வைக்கப்பட்டார்

குருநகர், டிச 7
குருநகர்ப் பகுதியில் பலரிடம் ஏமாற்றிப் பணம் பறித்துவந்த நபர் சம்பந்தப்பட்டவர்களிடம்மன்னிப்புக்கேட்க வைக்கப்பட்டார்.

மேற்படிசம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை குருநகர் மவுண்கார்மேல். வீதியில் நடைபெற்றது

இந்த ஏமாற்றுப் பேர் வழி பற்றிய செய்தி 'உதயன்' ஞாயிறு இதழில் பிரசுரமாகி இருந்தது தெரிந்ததே!

### வவுனியாவில் ஈ.என். டி எல்.எவ் அலுவலகம்

வவுனியா டிச 7
ஈழம்தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என் டி எல்.எவ்) வவுனியா பஸ் நிலையத்தில் அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளது.

இந்த அலுவலகத்தில் வவுனியா மாவட்டத்துக்குப் பொறுப்பான செந்தில் தலைமையில் அரசியல் வேலைத் திட்டங்கள், பொது மக்கள் தொடர்பு போன்ற பணிகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
(ஒ-164)

### சாரணர் சிரமதானம்

யாழ்ப்பாணம், டிச 7
காங்கேசன் துறை சாரணர் மாவட்டத்தின் பத்தாம் ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தை முன்னிட்டு மானிப்பாய் தொகுதியின் சுன்னாகம் பிரிவைச் சேர்ந்த சாரணர் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலில் சிரமதானம் ஒன்றை மேற்கொண்டனர்.

சுன்னாகப் பிரிவின் உதவி மாவட்ட ஆணையாளர் திரு. சி. காசிநேசன் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானத்தில் மானிப்பாய் மெமோறியல், கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் பங்கு பற்றின. (ச)

## நெற்செய்கை பாதிப்பு

கிளிநொச்சிப் பகுதியில் நெற் பயிர்கள் மழைக் குறைவால் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வருடம் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்து நீரைக் கொண்டு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நீர்ப்பாசனம் பெரும்பிரச்சினையாக அமைந்துள்ளது.

31ஆம் நாள் நினைவு தினம்



உயர்திரு ச. அ. சேபரத்தினம்
(ஓய்வுபெற்ற அஞ்சற் பரிசோதகர்)
மண்ணில் பிறப்பு: 17 - 07 - 1928 மண்ணில் இறப்பு: 07 - 11 - 1988

அன்பிலும் அறத்திலும் பண்பிலும் படிப்பிலும்
என்றுமே எம்மை வளர்த்திட்ட எந்தையே!
என்புதோல் இரத்தம் எல்லாமே ஈந்து எம்
அன்பிலே தோய்ந்த அருமை அப்பா நீர்!
எம்மையே விட்டென்று நீர் பிரிந்திடீர்
உம்மையே நாளும் நாம நினைந்து புலம்பி
எம்மைத்தினம் உருக்கி யேசுநாதர் பாதமடி
தம்மையே சேர்த்திட்டீர அவர்தாள் பணிகின்றோம்.

என்றும் மறவாத;
மனைவி தவமணி,
பிள்ளைகள், குமார், சின்னேய் சத்தி, அமுதன், ஆனந்தி,
உற்றூர், உறவினர், நண்பர்கள்.
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (8176)


அறிவித்தல்

எமது சங்கப் பண்ணையில் நான்கு பசுமாடுகளும், மூன்று நாம்பன் கன்றுகளும் எதிர்வரும் 12 12 1988 இல் காலை 10 00மணிக்கு (திங்கட்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என அறியத் தருகின்றோம். வாங்க விரும்புவோர் எமது காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்
கலசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.
(C473)

கணக்கியல்
ஜி. சி. ஈ. உயர்தரம்
வினு விடை 1987 - 1988
மற்றும சில முக்கிய விடயங்கள்
ஆசகம்:
க. தங்கராஜா, B. Sc.
(P F T) Sp., Dip in Ed.
கிடைக்குமிடம்;
✶ பூபாலசிங்கம் புத்தகசாலை
✶ ஸ்ரீலங்கா புத்தகசாலை
(7789)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
'உயிர் வைக்க உடல் மண்ணுக்கு"



திரு. வே. த. தனிகாசலம்
(அல் வைத்தணி)
(அதிபர், அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை)
தோற்றம்: 12 - 09 - 1928 மறைவு: 07 - 12 - 1987

ஆண்டொன்று போனதுவோ
ஆருயிர் உங்களை மறப்போமோ
வாடியே தடிக்கின்றோம்
வந்தெமைப் பார்க்க மாட்டீர்களோ?
உங்கள் ஆத்ம சாந்தியை வேண்டி நிற்கும்
மனைவி மக்கள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.
'ராஜஸ்தலம்'
அல்வாய் தெற்கு.
அல்வாய். (7982)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு. கா. நல்லதம்பி
(முன்னள் தொலைபேசி இயக்குனர்
மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை)
தோற்றம்: 25 - 8 1939 மறைவு: 17 - 12 - 1987
திதி: 07 - 12 - 1988

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டுடன் எம்மை வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் எத்தனைதான் ஓடி மறைந்தாலும் உங்கள் அன்புத திரு உருவும், பாசம் நிறை நினைவுகளும் என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கும்!

அன்பு மனைவியும், பிள்ளைகளும்.
"லெனின் வாசா"
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை. (7775)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி







வல்லிபுரம் சண்முகசுந்தரம் — மலர்வு: 16 01-1937
ச. உதயகுமார் — மலர்வு: 28 03-1977
ச. சுதாமதி — மலர்வு: 19 03-1980

உதிர்வு: 19-11-1987
திதி: 05 12-1988

நிஜமாகி இருந்த நீங்கள் எம் வாழ்வில்
நிழற்படமாய் மாறிவிட்ட போதிலும்!
நீங்கள் உண்மையில் இறக்கவில்லை
எம் உள்ளங்களில் வாழ்கின்றீர்கள்
அன்பின் சேவையில் அகமகிழ்ந்தீர்கள்!
- இப்போ
ஆறுதலாய் துயில் கொள்கின்றீர்கள்!
வாழ்வினிலே எமை உயர்த்த
கண் அயராது பாடுபட்டீர்கள்!
காலன் அவன் விதிவசத்தால்
பழம் பிள்ளையார் நிழல்பதம்
உம் புத்திரர்களுடன் உறங்குகின்றீர்கள்!
வாழ்க்கையை இனிது வாழ்ந்து காட்டிய
உங்கள் வழியில் நாமும் நடக்க
உங்கள் ஆசி வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், அம்மா,
மாமி, சகோதரர்கள், மச்சான்மார்,
மைத்துனிமார், மருமக்கள்,
உற்றூர், உறவினர்கள்.
21, பழம் பிள்ளையார் வீதி,
மல்லாகம்.

அன்புச்செல்வமே! அருமை மகனே!!
பன்முடி வேண்டி நின்றோம்
கவர்ந்திட்டான் காலதேவன்
சென்றதோ வருடம் ஒன்று
சிலிர்க்குது எங்கள் நெஞ்சம்
புன் சிரிப்பின் புகலிடம்
போன இடம் சொல்வாயோ?
அருது ஆருத நெஞ்சம்
இது அழுதாலும் தீராதே!
இளம் வயதில் நெடும் பயணம்
நீங்களும் கொண்டது என்னே!
பெற்றவர்க்கினிய பிள்ளைகளாய்
சுற்றவர் களிக்கும் கவிஞர்களாய்
சோதரர்க்கு ஒரு துணைவனாய்
அடக்கப் பண்பின ஆழியாய்
சிறந்து வாழ்ந்து காட்டிய அப்பனே!
எங்கள் அன்புச் சுதாவே!
நீங்கள் இன்று பழம்பிள்ளையார் நிழல்பகம்
உங்கள் தந்தையுடன் உறங்குகின்றீர்களோ!

உங்கள் பிரிவால் வாடும்
அம்மா, சகோதரர்கள், அப்பம்மா,
அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா,
சித்தப்பாமார், சித்திமார்,
மாமாமார், மாமிமார்,
மச்சாளிமார், மச்சான்மார்.
(C/427)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
உறின்நட்டு அறின்ஒருஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.

**பொருள்:**
தமக்குப் பயன் உள்ளபோது நட்புச் செய்து பயன் இல்லாதபோது நீங்கிவிடும் தகுதியில்லாதவரின் நட்பைப் பெற்றாலும் என்ன? இழந்தாலும் என்ன?


# உதயன்

உண்மை - அஞ்சாமை - ஐக்கியம்

இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24605
யாழ்ப்பாணம். 22073
07-12-1988 த. பெ. இல 23


## பயங்கர இரவுகள்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்கள் இப்போது நாளாந்தம் பயங்கர இரவுகளைக் கழித்து வருகிறார்கள்!

கடந்த சுமார் பத்து வருடங்களாக இராணுவ நடவடிக்கைகளால் எதிர்நோக்கி இருந்த மரண பயத்தைவிட, இப்போதைய பயங்கர இரவுகள் அவர்களை அணு அணுவாகச் சித்திரவதை செய்கின்றன!

பொழுது கருகி, காரிருள் கவ்வியதும் வீட்டில் உள்ள ஒவ்வொருவர் மனமும் துடியாய்த் துடிக்கிறது. சிறு சத்தம், அரவம் கேட்டாலும் நெஞ்சத்தில் ஒருவித பயம் படர்ந்து கொள்கிறது. வெளிப் படலையை மட்டுமன்றி வீட்டுக் கதவையும் இழுத்துப் பூட்டிவிடுகிறார்கள்.

அவசர காரியம் என்று தெரிந்தவர் வந்து கூப்பிட்டாலும் நம்பித் திறக்க முடியாத நிலை. அந்த அளவுக்கு மக்களைக் கிலி கொள்ளச் செய்திருப்பவை இப்போதைய இரவுக் கொள்ளைகளே. ஆயுதபாணிகள் நடத்தும் அக்கிரமக் கொள்ளைகளே.

நேற்று இரவு இன்னென்ன வீடுகளில், ஒழுங்கைகளில், வீதிகளில் கொள்ளை என்ற செய்தியை எதிர்பார்த்தே காலையில் எழ வேண்டிய துர்ப்பாக்கியம் குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அரசியல் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், பாதிப்புக்கள் என்று பொதுவாகவும், உணவு, தொழில் என்று ஏனைய குடும்பப் பிரச்சினை என்று தனிப்பட்ட ரீதியிலும் ஒவ்வொரு தமிழனும் நாள் முழுவதும் கஷ்டமுறும் காலகட்டம் இது.

அவை போதா என்று கொள்ளையர் தொல்லை மக்களின் நாளாந்த வாழ்க்கையை நாசமாக்கி நலிவடையச் செய்கிறது.

ஒரு நாட்டில் பசியும் பஞ்சமும் தலைவிரித்தாடினால் தான் திருட்டுகள் - கொள்ளைகள் மலிவதாகக் கூறுவார்கள். குடாநாட்டில் அப்படி ஒரு மோசமான நிலை இன்னும் ஏற்பட்டதாக இல்லை.

போதிய வருவாய் இல்லாததால், பொருளாதாரக் கஷ்டத்தால் வயிற்றுப் பசி போக்க முடியாத பல்லாயிரவர் நம்மிடையே இருக்கிறார்கள் என்பது உண்மையே.

ஆனால் இப்பொழுது கொள்ளை நடத்துபவர்கள் நிச்சயமாக அவர்கள் இல்லை. ஏழைகள் என்பதற்காக அவர்கள் கொள்ளையில் ஈடுபடத் துணியமாட்டார்கள்.

ஏழைகளாக இருப்பவர்கள் தங்களைப் போன்ற வசதி குறைந்தவர்கள், நடுத்தர குடும்பத்தினர் போன்றவர்களிடம் கொள்ளையிடமாட்டார்கள். சராசரி மனிதனது வீட்டில் திருட மாட்டார்கள்.

இப்போதைய இரவுக் கொள்ளையரோ, மற்றவர்கள் பலநாள் பாடுபட்டு, கஷ்டப்பட்டு உழைத்துத் தேடியதை ஒரு பொழுதில் கவர்ந்து, தாம் டாம்பீக வாழ்க்கை நடத்தத் துணிந்தவர்களே. சாதாரண மனிதனிடம் ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்திச் சூறையாடுபவர்களே.

இந்தச் சமூகவிரோதத் தொல்லை தடுக்கப்படாவிட்டால் பயங்கர இரவுகள் எம் மக்களைத் தொடரும். வீட்டில் உள்ள உணவு, உடை மற்றும் பாவனைப் பொருட்களையே கொள்ளை அடிக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகும் போது, மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க எவருமே இல்லாத நிலை உருவாகி இருப்பது துரதிஷ்டமானது; கவலைக்குரியது.

ஆகையால் மக்கள் தங்கள் உடைமைகளைத் தாமே காப்பாற்றுவதற்கு ஒன்றுபட்டுச் செயற்படுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை. தன் கையே தனக்கு உதவி என்ற நிலையில், அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்று உணர்ந்து கொள்ளையரை மனத்துணிவுடன் மக்களே எதிர்க்கவேண்டும்.

## 3வார காலத்தின் பின் வெளியூர் தபால்விநியோகம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 வார கால இடைவெளியின் பின் வெளியூர் தபால் விநியோகம் கடந்தவாரம் இடம்பெற்றது.

அரச அதிபர் திரு கே. செல்வரத்தினம் கொழும்பிலிருந்து தபால் பொதிகளை எடுத்துவர கச்சேரி வாகனத்தை வழங்கியிருந்தார்.

இம்மாவட்டத்திலிருந்து வெளியூர்களுக்கான நேரடித்தொலைபேசித் தொடர்புகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. (ச-21)

### ஆர்ஜென்டீனு புரட்சி தோல்வியுற்றது

புவனஸ் அயர்ஸ் டிச 6

ஆர்ஜென்டீனு இராணுவத்தின் ஒரு பிரிவினர் நடத்திய புரட்சி தோல்வியில் முடிவடைந்து விட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி அல்போன்ஸ்ஸா இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில், "புரட்சி நடத்திய இராணுவத்தினர் தங்களிடமிருந்த ஆயுதங்களையும் வெடிகுண்டுகளையும் அரசுக்கு விசுவாசமான படையிடம் ஒப்படைத்து விட்டனர்" என்று தெரிவித்தார்.

இதற்கு முன்னர் புரட்சிப் படையினர் கைப்பற்றிய இராணுவ முகாம் மீது தாக்குதலை நடத்தும்படி ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.

அதற்கு இணங்க அரசுக்கு விசுவாசமான படைகள் முகாமை நோக்கி முன்னேறிச் சென்றன. (ஒ-எ)

வெளி உலகில்

# தமிழ்நாட்டுச் செய்திகளைப் பிரசுரிப்பதற்கு மலேசியத் தமிழ்ப்பத்திரிகைகளுக்குத் தடை?

## அரசு தீவிர பரிசீலனை; தமிழ் அமைச்சர் கவலை

கோலாலம்பூர், டிச 6

தமிழ் நாட்டில் இருந்து வரும் செய்திகள், தகவல்களை மலேசியாவில் உள்ள தமிழ் பத்திரிகைகள் அதிக அளவில் பிரசுரிக்க தடை விதிப்பது பற்றி கோலாலம்பூர் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இது தொடர்பாக மலேசியாவில் இருந்து வெளிவரும் தமிழ்நேசன், தமிழ் ஓசை, தினமணி ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளுக்கு நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கோரியுள்ளது மலேசிய அரசு.

மலேசிய மக்களின் கலை, கலாசார உணர்வையும் எண்ணத்தையும் திசை திருப்பும் வகையில் பல தமிழ்ச் செய்தி, தகவல்களை இப்பத்திரிகைகள் பிரசுரித்து வருகின்றன என்று அரசு குற்றஞ் சாட்டி உள்ளது.

இது பற்றி நடவடிக்கை எடுக்க உள்துறை இணை அமைச்சர் மொஹத்ஜானித் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பிரச்சினைக்குரிய தமிழ்ச் செய்தி தகவல்களைத் தடை செய்வது பற்றி இக்குழு பரிசிலனை செய்து வருகின்றது.

மலேசிய அரசில் திரு சாமிவேலு என்ற தமிழ் அமைச்சர் இருக்கிறார்.

மலேசிய அரசின் கட்டுப்பாடுகள் குறித்து அமைச்சர் சாமிவேலு கவலை தெரிவித்திருக்கிறார்.

மலேசியாவில் பெரும்பான்மையோர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியத் தமிழரும் குறிப்பிடத்தக்க அளவு வசிக்கின்றனர். (எ)

# ஜெயலலிதா ஆலோசகர் நடராஜன் அரசுப் பணியில் இருந்து விலகினார்

சென்னை, டிச 6

ஜெயலலிதாவின் ஆலோசகர் என்று கூறப்பட்டு வந்த தமிழக அரசு செய்தித்துறை அதிகாரி திரு நடராஜன் தனது அரசுப்பதவியை இராஜினமாச் செய்து விட்டார்.

நீண்ட காலமாக விடுமுறை போட்டுவிட்டு, ஜெயலலிதாவின் கட்சி விவகாரங்களைக் கவனித்து வந்தவர் நடராஜன். இவருடைய மனைவி சசிகலா, ஜெயலலிதாவின் உதவியாளர்.

அரசு அதிகாரியாக இருந்து கொண்டே அரசியலில் ஈடுபடுவதாக மாற்றுக் கட்சியாளர்கள் நடராஜன் மீது குற்றஞ்சாட்டி வந்தனர்.

உடல் நலமின்றி இருந்ததற்கான மருத்துவச் சான்றிதழ் காட்டி மீண்டும் வேலையில் சேர்ந்த நடராஜன் சென்ற நவம்பரில் அரசுப் பணிக்கு முழுக்குப் போட்டார். செய்தியாளர் மத்தியில் நடராஜன் சொன்னதாவது.

ஜெயலலிதாவின் ஆலோசகர் என்ற தவறான எண்ணத்தினால் என்னை அடிக்கடி இடமாற்றம் செய்து உயர் அதிகாரிகள் உபத்திரவம் தந்தனர். தொல்லையில் இருந்து விடுபட இராஜினமாச் செய்து விட்டேன்.

ஜெயலலிதாவின் பக்கத்து வீட்டுக்காரரைப் போல் இனி உதவி செய்வேன்.

இப்படி நடராஜன் சொன்னார். (எ-4)

# தந்தையின் புதைகுழி அருகே பெனாஸிர் எடுத்த சத்தியம்!

முப்பத்தைந்து வயதான திருமதி பெனாஸிர் பூட்டோ அமெரிக்கக் ஹவார்ட் பல்கலைக்கழகத்திலும், பின்னர் லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் படித்தவர்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக யூனியன் தலைவராகவும் திருமதி பெனாஸிர் இருந்தார்.

படிப்பை முடித்துக் கொண்டு பாகிஸ்தானுக்கு 1977 இல் அவர் திரும்பினார். அந்த ஆண்டே ஸியா - உல் ஹக் நடத்திய புரட்சியில அவரின் தந்தை ஸுல்பிகார் அலி பூட்டோ பதவியிழந்தார்.

பின்னர் அதிபர் ஸியாவின் ஆட்சி, பூட்டோ மீது கொலைக்குற்றம் சுமத்தித் தூக்கிலிட்டது.

மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முதல் நாள் பெனாஸிர் சிறைச்சாலைக்குச் சென்று தந்தையைச் சந்தித்தார்.

சிறைக் கசவுகள் பூட்டப்பட்ட நிலையில் கம்பிகள் ஊடாகத் தந்தை உடன் பேசினார்.

தந்தைக்கு நாளை தூக்கு. பெனாஸிருக்கு ஓர் ஆசை வந்தது.

சிறைக்காவலாளரைக் கெஞ்சிக் கேட்டார். "கதவுகளைத் திறந்து விடுங்கள் நாளை மறைந்து போக உள்ள தந்தையைக் கட்டித் தழுவி விடை பெற ஆசைப்படுகிறேன்" பெனாஸிரின் ஆசை நிறைவேற்றப்படவில்லை. சிறைக்கதவுகள் திறக்கப்படவில்லை. கம்பிகள் ஊடாகத் தந்தையின் கைகளைத் தொட்டு விடைபெற்றார் பெனாஸிர்.

தூக்கிலிடப்பட்ட பின்னர் பூட்டோவின் உடல் அவரின் குடும்பத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

புதைகுழி அருகே பெனாஸிர் நிற்கிறார்.

இது பற்றி பெனாஸிர் தனது 'கிழக்கின் புதல்வி' என்ற சுயசரிதையில் எழுதுகிறார்.

"தந்தையின் இலட்சியம் புதைகுழியின் அருகே எனது இலட்சியமாக மாறியது.

'தந்தையின் ஆத்மா எனக்கு உள உறுதியையும் பலத்தையும் அளித்தது.

அந்தக் கணமே நான் தீர்மானித்தேன் - 'பாகிஸ்தானில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநிறுத்தும் வரை உறங்கப் போவதில்லை'' என்று

அதன் பின்னர் ஜனநாயக மீட்புப் போராட்டத்தில் அவர் ஈடுபட்டார்.

அதிபர் ஸியாவின் சர்வாதிகார ஆட்சி பெனாஸிரை கைது செய்தது. பாகிஸ்தானில் உள்ள 'இ' தர சிறைகளிலே அவர் அடைக்கப்பட்டார்.

அதனால் அவரின் உடல் நலம் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

இறுதியில் உலக நாடுகளின் நெருக்குதல் காரணமாக அதிபர் ஸியா, பெனாஸிரை வெளிநாடு செல்ல அனுமதித்தார்.

30 - 12 - 1985 இல் பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து 1986 ஏப்பிரலில் பெனாஸிர் தாயகம் திரும்பினார்.

மீண்டும் ஜனநாயக மீட்பு போராட்டத்தை பெனாஸிர் தொடங்கினார். மறுபடியும் ஸியா ஆட்சி அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. ஆனால் ஒரு மாதத்தில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

ஆகஸ்டில் அதிபர் ஸியா உயிரிழந்த பின்னர் பெனாஸிர் காபந்து அரசு, இராணுவம் பற்றி எல்லாம் மிகவும் கவனமாக அளந்து பேசி வந்தார்.

இராணுவத்தை தன் வசப்படுத்தும் முறையில் தனது நடவடிக்கைகளை அவர் அமைத்துக் கொண்டார்.

'பூட்டோயிஸம்' கொள்கையை அவர் உருவாக்கினார். பூட்டோ கனவு கண்ட சோஷலிசம் சமூக ஜனநாயகம், காணிச்சீர் திருத்தம், தேசியமயம் என்று அவர் வரையறுத்தார்.

மக்கள் கட்சியில் உள்ள தீவிரவாத இளைஞர்கள் எழுப்பிய அமெரிக்க எதிர்ப்புக் கருத்துக்கள் தனக்கு ஏற்புடையவை அல்ல என்றும் அவர் அறிவித்தார்.

செய்தியாளர் மாநாடுகளில் பதிலளிக்கும் போது வார்த்தைகளை தெரிந்தெடுத்தே பாவித்தார்.

"அதிபர் ஸியாவின் இஸ்லாமியப்படுத்தும் கொள்கையை நீங்கள் தொடருவீர்களா?

பெனாஸிர் இதற்கு பதிலளிக்கையில் பின்வருமாறு சொன்னார்:

"ஜெனரல் ஸியா நாட்டை இராணுவ மயப்படுத்தும் கொள்கையைத்தான் அமுல் நடத்திவந்தார்; இஸ்லாமியப்படுத்தும் கொள்கையை அல்ல!"

இப்படி அரசியல் வாதிக்குரிய பதிலளிக்கும் திறமையைப் பெற்ற பெனாஸிர் உலகிலேயே முதலாவது முஸ்லிம் பெண் பிரதமர் என்ற பெருமையையும் பெறுகின்றார். (எ)

# வடக்கில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் நடக்குமா?

கொழும்பு, டிச 7

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரசாரக் கூட்டம் எதுவும் இம்முறை வடக்கில் நடைபெறமாட்டாது என்று தெரிகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஆதரித்து வடபகுதியில் கூட்டங்கள் நடத்துவது சம்பந்தமாக இன்னும் தீர்மானிக்கப்படவில்லையாம்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வடபகுதி செல்வாரா என்பதும் இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை. தற்போதைய நிலையில் அவர் வடபகுதி செல்வது சாத்தியமானது இல்லை என்றே கூறப்படுகிறது.

இதற்கிடையில் சிறிமாவோ கிழக்கில் பொதுக்கூட்டங்கள் நடத்தி உள்ளார்.

ஐ. தே. கட்சி சார்பில போட்டியிடும் திரு. பிரேமதாசா ஏற்கனவே கிழக்கு சென்று பொதுக் கூட்டங்கள் நடத்தியிருந்தார்.

இவரது வடபகுதி விஜயம் சம்பந்தமாக எதுவித அறிவிப்பும் வெளிவரவில்லை.

நாட்டின் தென்பகுதியில் இவர் கூட்டங்கள் நடத்தச்செல்லும் இடங்கள் எல்லாம் தீவிரவாதிகள் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் கிழக்கில் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த மாவட்டத்தில் தேர்தல் பிரசாரத்துக்கென கட்சிக் கிளைகளைப் புனரமைக்கவும் புதிய கிளைகளை ஆரம்பிக்கவும் முனைந்துள்ளது.

அத்துடன் கல்முனையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பொதுக் காரியாலயம் ஒன்றையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திறந்து வைத்துள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சியும் இந்த மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. (இ-14 3)

## ஜனாதிபதி வேட்பாளர்கள் கூட்டணியுடன் பேச விருப்பம்

ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் தமிழர்விடுதலைக் கூட்டணியினருடன் பேச்சுக்கள் நடத்த விருப்பம் தெரிவித்துள்ளனர்.

"அவர்களைச் சந்தித்து இனப்பிரச்சினை தொடர்பான அவர்களின் நிலைப்பாட்டை நாம் அறிந்து கொள்வோம். அதன் பின்னர் எமது அரசியல்குழு தனது முடிவை அறிவிக்கும்" —

இப்படி கூட்டணிச் செயலதிபர் அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

பிரதமர் பிரேமதாஸ எம்மைச் சந்திக்க விரும்புவதாகக் கூறி திரு சிவசிதம்பரத்துடன் தொடர்பு கொண்டுள்ளார்.

திருமதி பண்டாரநாயக்காவும் எம்மை இரண்டு தடவைகள் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

திரு. ஒஸி அபயகுணசேகராவும் மீண்டும் எம்மைச் சந்தித்துப் பேச விருப்பம் தெரிவித்திருக்கிறார்

இப்படி திரு அமிர்தலிங்கம் தெரிவித்தார். (இ-...)

### தலைவராகத் தெரிவு

சுழிபுரம், டிச 7

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராகத் திரு ம. சற்குணசிங்கம் தெரிவு செய்யப்பட்டார். (இ-28)

### அரச அதிபர் இடமாற்றம்

மாத்தளை அரச அதிபர் ஜி முதன்னாயக கொழும்புக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டார்.

அரசியல்வாதி ஒருவரின் தலையீடு காரணமாக அவர் இடமாற்றம் செய்யப்பட்டார் என்று சொல்லப்படுகிறது. (இ-எ)

# கொழும்பிலிருந்து நகைகளை எடுத்து வருவதில் தாமதம்

யாழ்ப்பாணம், டிச 7

வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்த நகைகளைக் கொழும்பிலிருந்து இங்கு எடுத்து வருவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. தென் பகுதிக் குழப்ப நிலையே இதற்குக் காரணம் ஆகும்.

யாழ் மக்கள் வங்கியின் பிராந்தியத் தலைமை அலுவலக வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

யாழ் பிரதான வீதி மக்கள் வங்கிக்கிளை பாழ் கன்னாதிட்டிக் கிளை சங்கானை கிளை, புங்குடுதீவுக் கிளை ஆகியவற்றில் நகைகளை அடகு வைத்தவர்களின் நகைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் கடந்த அக்டோபரிலேயே மேற்கொள்ளப்பட்டன.

தென்பகுதியில் நிலைமை பாதிக்கப்படாமலிருந்தால் சம்பந்தப்பட்டவர்களின் நகைகளைக் கடந்த மாதத்திலேயே வழங்கி இருக்க முடியும்

இந்தநகைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக நகைகளை அடகு வைத்தவர்கள் அதற்கான பணத்தைப் பல மாதங்களுக்கு முன்பே செலுத்தி விட்டனர்.

ஆனால் தென் பகுதியில் நிலைமை பாதிக்கப்பட்டதையடுத்து நகைகளை அங்கிருந்து எடுத்து வருவதில் தற்போது தாமதம் ஏற்பட்டிருக்கிறது

எனினும் யாழ் பிராந்தியத் தலைமை அலுவலகம் நகைகளைக் குறுகிய கால இடைவெளியில் கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. (இ-ஐ)

# தெங்கு-பனம் பொருள் கூட்டுறவுச சங்கத் தொழிலாளருக்கு ஓய்வூதியத் திட்டம அமுலாகும

காங்கேசன்துறை, டிச 7

தெங்கு - பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்களுக்கு இதுவரை காலமும் விபத்து ஓய்வூதியத் திட்டம் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. அடுத்த ஆண்டில சகல தொழிலாளருக்கும் ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்த வடசெனை தெல்லிப்பழை தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் முடிவு செய்துள்ளது

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் மூலம் சங்கத்தின் தொழிலாளர்கள் யாவரும் வயது முதிர்ந்து கஷ்டநிலைக்கு தள்ளப்படும் காலத்தில் உதவமுடியுமெனவும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இக் கூட்டத்தில் கூட்டுறவு உதவி ஆணையாளர். திரு. ஜே அல்போன்ஸ் சமாஜ பொது முகாமையாளர் திரு. ஆ. ந இராஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டு தெல்லிப்பழை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

இதை அடுத்து புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெற்றது.

### வெற்றி

நீர்வேலி வலி கிழக்கு (தென்பகுதி) ப. நோ. கூட்டுறவுச்சங்க நெறியாளர்கள் தேர்தலில் திரு எஸ். சபாரத்தினம் தலைமையில் போட்டியிட்ட குழு வெற்றி பெற்றது. (இ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகளை பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



# உதயன்

07 12 1988 புதன்கிழமை



அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக் கொள்ள நாடுங்கள்


## சாவகச்சேரி உ.அ.அ. பிரிவு: 2ஆகப் பிரிக்கச் சிபார்சு

யாழ்ப்பாணம், டிச.7

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு இரண்டு உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளாகப்பிரிக்கப்படவேண்டும் என்று அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது

இதே வேளையில் ஏற்கனவே யாழ் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்லிங்கம் செய்த சிபார்சு ஒன்றில் வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவு பின்வரும் கிராம சேவகர்பிரிவுகளை உள்ளடக்கி இருக்கும்.

குடாக்கரையூர், அம்பன், குடத்தனை, நாகர் கோவில் வடக்கு, நாகர் கோவில் தெற்கு, செம்பியன்பற்று, மருதன் கேணி, உடுத்துறை, முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக்குளம் என்பனவாகும்.

புதிய உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் அம்பனில் அமைந்திருக்கும்.

இந்தப் பிரிவுகளுக்குத் தேவையான நிதியை யாழ்மாவட்டத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்துவழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. (ஒ-ஐ-5)

## தயான் சத்தியப்பிரமாணம் செய்யவில்லை

கொழும்பு டிச 7

வடக்கு—கிழக்கு மாகாணசபை உறுப்பினராக திரு. தயான் ஜெயதிலக டி சில்வாவும் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவில்லை.

இம்மாதம் 10 ஆம் திகதி மாகாணசபையின் முதலாவது கூட்டம் கூடும்போது இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார். (உ-எ)

## மேலதிக படி

யாழ்ப்பாணம், டிச. 7

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களுக்கு தற்போதைய படிகளுக்குமேலதிகமாக விசேட படிகள் வழங்கப்படவுள்ளன.

அரசாங்கத்தின் விசேட அறிவித்தல் ஒன்றில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஐ-5)

## கொள்ளைகள் தொடர்கின்றன:

## யாழ் கோவில் வீதியில் ஆயுதமுனையில் நகைகள் அபேஸ்!

வீட்டில் உள்ளோரை ஆயுதமுனையில் பணயம் வைத்துக் கொண்டு அனைத்து நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

நல்லூர் கோவில் வீதியில் என் சின்னத்துரை என்பவரின் வீட்டில் திங்கட்கிழமை இரவுசுமார் 7 30 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது:

வீட்டு மதிலால் ஏறிக் குதித்து வந்த இருவர் துப்பாக்கி முனையில் வீட்டில் இருந்தவர்களைப் பணயம் வைத்து கொள்ளையில் இறங்கினர்

பெண்கள் அணிந்திருந்த நகைகளும் குளந்தை ஒன்றின் கையில் இருந்த காப்புகளும் கொள்ளையிடப்பட்டன.

கொள்ளையர் திரும்பிச் செல்லும்போது எச்சரிக்கை வேட்டுக்களையும் தீர்த்துச் சென்றதாகவும் அறியவந்துள்ளது.

இதேவேளை இதே இரவு கட்டப்பிராயிலும் இராசேந்திரம் ரகுபதி என்பவரின் விட்டிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையிடப்பட்டன. (ஒ-5 10)

## இந்திய அணிக்கு டெஸ்ட் தொடரில் வெற்றி

ஹைதராபாத், டிச. 7

நியூஸிலாந்துக்கு எதிரான மூன்றாவது இறுதி கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா 10 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றது. இதன் மூலம் இந்த ஆட்டத்தொடரையும் இந்தியா 2 – 1 என்ற கணக்கில் வென்றது.

ஹைதராபாத்தில் நடந்த டெஸ்ட் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 254 ஓட்டங்களையும் இந்திய அணி 358 ஓட்டங்களையும் எடுத்திருந்தன.

இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 65 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்று நான்காவது நாள் ஆட்டத்தை நியூஸிலந்து அணி ஆரம்பித்தது.

எனினும் காலை ஆட்டத்திலேயே நியூஸிலாந்து அணி 124 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது இந்திய வீரர்களான கபில்தேவ், அயூப், நரேந்திர ஹிர்வானி ஆகியோர் அடுத்தடுத்து விக்கெட்டுகளை வீழ்த்தி தமது அணிக்கு வெற்றிவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

வெற்றிக்கு 21 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி விக்கெட் இழப்பின்றி அதனைப் பெற்றது. சிறிகாந்த் 18 ஓட்டங்களைப் பெற்றார். (உ)

## சேவை முன் பயிற்சி முடிந்த 96 ஆசிரியர்களுக்கும் ஜனவரியில் நியமனக்கடிதம்

யாழ்ப்பாணம், டிச, 7

யாழ்ப்பாணத்தில் சேவை முன் பயிற்சி நெறியை முடித்துக் கொண்ட விஞ்ஞான பட்டதாரி மற்றும் ஆரம்ப ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனவரி முதல் வாரத்தில் வழங்கப்படும்.

மேற்படி பயிற்சி நெறியை முடித்துக்கொண்ட 96 ஆசிரியர்களுக்கும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே நியமனங்கள் வழங்கப்படவுள்ளன

யாழ்ப்பாண மாவட்டத்தில் 19 பேருக்கு மட்டுமே இந் நியமனம் வழங்கப்படும் என கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-10)

## மேற்கிந்திய அணி வெற்றி

பேர்த், டிச7

பேர்த்தில்நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்திய அணி 167 ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

ஓட்ட விவரம் வருமாறு:—

★ மேற்கிந்திய தீவுகள் அணி:—

முதல் இன்னிங்ஸ்-449

இரண்டாவது இன்னிங்ஸ் — 9 விக்கெட் இழப்புக்கு 349

★ ஆஸ்திரேலியா அணி:—

முதல் இன்னிங்ஸ் = 8 விக்கெட் இழப்புக்கு 395

இரண்டாவது இன்னிங்ஸ் — 9 விக்கெட் இழப்புக்கு 234

ஐந்துஆட்டங்களாகக் கொண்ட இந்த ஆட்டத்தொடரின் முதலாவது ஆட்டத்திலும் மேற்கிந்திய அணியே வெற்றிபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது (உ)


## Vacancy for Post of Steno - Typist

We are looking for an efficient young lady to fill the above Vacancy in our Company.

Applicants should posses the basic educational requirements of 6 passes at G.C.E. (O/L) with a credit pass in English. They should also have speeds of Shorthand - 80 w.p.m. Typing - 40 w.p.m. and have a minimun of two years in the relevant experience Salary negotiable.

Please apply in person with Bio-data before 10 December 1988 to:

Operations Manager,
**Project Management Services Limited**
33. Brown Road,
Neeraviadi,
Jaffna (8064)



## வெற்றுச் சாக்குக் கேள்விப் பத்திரம்

பண்டத்தரிப்புப் பரிஷ் ப நோ. கூ. சங்கத்தால் 4011 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் பெற விரும்புவோர் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் ரூபா 250/-ம், மீளளிக்கப்படாத பணமாக ரூபா 15/-ம் செலுத்திப் பற்றுச்சிட்டைக் காண்பித்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப படிவங்கள் பெறவேண்டிய கடைசித் திகதி 12-12-88. கேள்விப் பத்திரங்கள் யாவும் பொது முகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப நோ. கூ. சங்கம். பண்டத்தரிப்பு என விலாசமிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி'' எனக் குறிப்பிட்டு 13-12-88 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்புப் பரிஷ ப நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு

(C 888)


## மேலும் ஏழரை-----

(1ஆம் பக்கதொடர்ச்சி)

உபயோகிக்கப்படாமல் இருக்கிறது.

இந்த நிதி இவ்வருட இறுதிக்குள் —அதாவது இந்த நிதியாண்டு முடிவதற்குள் — உரிய குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படவேண்டும். அல்லது உரிய குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்காக வங்கிகளுக்கு அனுப்பப்பட வேண்டும் அப்படி இல்லாமல் —அந்த நிதி உபயோகிக்கப்படாமல் — இருந்தால் அதனை திறைசேரி திரும்பப் பெற்றுவிடும்

ஆனால் தற்போது கிடைத்துள்ள வேலை நாட்களுக்குள் இந்தப் பணத்தை முற்றாக உரிய குடும்பங்களுக்கு பங்கீடு செய்துகொடுக்க முடியாது என்றும்—

இதற்கான அலுவலக வேலைகளைச் செய்து முடிப்பதற்கு போதிய வேலைநாட்கள் இல்லை என்றும்—

இதனால் இந்த நிதியில் பெரும்பகுதி இப்பகுதி மக்களுக்குக் கிடைக்காமல் போய் விடக்கூடும் என்றும் அரச அதிபர் திருவை முபஞ்சலிங்கம் விசனம் தெரிவித்தார் (உ)

## யாழ்ப்பாணத்தில் ...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வவுனியாவிலும்.

டிசம்பர் 16 ஆம் திகதி திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது இக் கூட்டங்களில் வேட்பாளர் திரு ஒலி அபேகுணசேகரா பேசுவார்.

(முன்னர் வந்த செய்தி ஐந்தாம் பக்கத்தில் )

## மதவாச்சி. ..

டாரங்கள் தெரிவித்தன.

எனினும் ரயில்வே ஊழியர்கள் சேதமுற்ற ரயில் பாதையை திருத்துவதில், இராணுவப் பாதுகாப்புடன் ஈடுபடுத்தப்பட்டனர்

அதேநேரமாக இன்று காலையில் திருத்த வேலைகள் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்பட்டது. (ஒ 16)

## குதிரைஓடியபின்..

வைக்கவுள்ளேன்.

— இப்படி திருமதி பண்டாரநாயக்கா கொலன்னாவை, பம்பலப்பிட்டிய அலிசாவலை ஆகிய இடங்களில் நடந்த பிரசாரக் கூட்டங்களில் பேசும்போது குறிப்பிட்டார் (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை

புத்தூர் சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை (இளைப்பாறிய விதானையார் J. P) காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், நவரத்தினவேல் (பொறியியலாளர்-கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்) நவரத்தினராசாத்தி, நவராணி, நவரத்தினராசவேல் (ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி. புத்தூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. யோகாம்பிகை (கண்ணொஸ்பத்திரி கொழும்பு), காலஞ்சென்ற பரமசிவம் (இளைப்பாறிய எஸ்டேட் சுப்ரிண்டன்), காலஞ்சென்ற சிறீராமச்சந்திரன், குகனேஸ்வரன், கங்காதேவி ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சி தாமோதரம்பிள்ளை (பொலிஸ் சார்ஜன்ட்), காலஞ்சென்ற திருமதி இராமநாதன், திருமதி காசிநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராகுலன், ராகவன் ரவீந்தன் (பரியோவான் கல்லூரி மாணவர்கள்) சங்கிதா, நிரோசிகா, நந்தகுமார், தனிக்குமார், பிரணவன், பிரதீபன், செந்தூரன் ஞானேந்திரன், தனலோசினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (7-12-88) புதன்கிழமை பி ப. 2 மணிக்கு புத்தூர் கிந்துசிட்டியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வேல்பதி, புத்தூர்.

ப. நவரத்தினராசாத்தி.

(8071)

### திரு. தாமோதரம்பிள்ளை (பிள்ளை)

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் காலஞ்சென்ற திரு. திருமதி சிதம்பரப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திரு தாமோதரம்பிள்ளை (பிள்ளை) லண்டனில் 30-11 88 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற யோகேஸ்வரி (உடுவில்), மானிப்பாயைச் சேர்ந்த தவமலர் (லண்டன்) ஆகியோரின் அன்புக் கணவரும், சுசிலா, பிரமீளா, மீரா, அகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாக்கியம், இலட்சுமி, சரஸ்வதி (லண்டன்), சிவசுப்பிரமணியம் (லண்டன்), சிவராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (C T.B.), பொன்னம்பலம் (Sectret Heart College), குணரட்ணசிங்கம் (லண்டன்) சிறீதரன் (Contractor, ரவிச்சந்திரன் (லண்டன்) நடராசமூர்த்தி (மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தயாபரன் (லண்டன்), திருமாறன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 7-12-88 இன்று லண்டனில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

பொ. சிறீதரன்

மதன மாளிகை,
கரவெட்டி. (8186)

### திரு. பூபாலு பாஸ்கரமூர்த்தி

21, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பூபாலு பாஸ்கரமூர்த்தி அவர்கள் 5. 12. 88 அன்று காலமானார். அன்னார் காலம் சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புக்கணவரும், முரளிதரன், மதிவதனி, சந்திரவதனி, பாலகிருஷ்ணன், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலம்சென்ற புவனேந்திரன், காலம் சென்ற லோகு. பாக்கியராஜா (ரவி), தங்கேஸ்வரி. கமலேஸ்வரி, திலகவதி, வரதலட்சுமி, புஸ்பவனிதா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (7. 12. 88) இன்று கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
முரளி

(8066)

### திருமதி நாகலிங்கம் செல்லாச்சி

கொக்குவில் மேற்கு அரசடியைச்சேர்ந்த இணுவை செல்லாச்சி காலமானார். இவர் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், திரு. நா. தம்பிராசா, திரு நா. சுந்தரலிங்கம் (சாந்தி றெக்ஸ்ரைல்ஸ் யாழ்ப்பாணம்), திரு. நா. கணேசலிங்கம் (பிரான்ஸ்), திருமதி தங்கச்சி அம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

S. J. வரதன்

இணுவில். (8185)

### திரு. S. கிருஷ்ணஐயர்

(Former Manager, Motor Dept. Jaffna Co-operative Stores Ltd)

ச. கிருஷ்ணஐயர் அவர்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற மீனாட்சி அம்மாளின் அன்புக் கணவரும், சங்கரஐயர் [ஓய்வு பெற்ற விரிவுரையாளர்] கமலாதேவி. ஸ்ரீகாந்தா [Lanka Cement Ltd] ஆகியோரின் அன்புத் தந்தையும், வைஜெயந்தி, ஹரிகரசர்மா [இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்], பாரிஜாதேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், சசிகலா, ஜெயப்பிரகாஷ், வித்தியா, திலீபன், ரம்யா, தர்ஷன், மது ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் 7-12-88 புதன் கிழமை பி. ப. 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோம்பையன்மணல் மயானத்திற்குஎடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:

திரு. சங்கரஐயர்.

16. கடையிற்சாமி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (8068)

### திரு. K.C. நடராசா

(Retired Assistant Valuer of the Valuation Department)

நல்லூரைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு K.C. நடராசா 6-12-88 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி செல்லையா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி செல்லையாவின் (மலாயன் பென்ஷனியர்) அருமை மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திரு. ராஜேஸ்வரன் (Lecturer University of Papua New Guinea) காலஞ்சென்ற மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு மகேந்திரன் Charted Accountant, Papua New Guinea), திருமதி வசந்தகோகிலா ராஜேஸ்வரன் (Teacher International School of Papua New Guinea) ஆகியோரின் அன்பு மாமனுமாவார், திரு தெய்வேந்திரன் (Health Supervisor, Jaffna Municipality) திரு. பரம்சோதி (Engineer Buildings Department) ஆகியோரின் மைத்துனரும், திரு K. குமாரசாமியின் மாமனும், திருமதி கமலா ஆறுமுகத்தம்பியின் ((Retired teacher) மைத்துனரும், மங்களா, விஜயசங்கர், விஜயலக்ஷ்மி ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்,

அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக (7. 12 88) இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி ந மகேஸ்வரி

37, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (8067)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் [illegible] நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 07 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna. on Wednesday 7th December 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org